**மொறட்டுவைப் பல்கலைக்கழகம் – இலங்கை**

# வெற்றிடம்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தேவையான தகைமைகள் கொண்ட அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமைத்துவ உதவியாளர் தரம் - III (களஞ்சியப் பராமரிப்பு)**

**தேவையான தகைமைகள்:**

1. க.பொ.த. (சா.தர) பரீட்சையில் கீழ் குறிப்பிடப்பட்ட பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.
   (i) சிங்கள மொழி/ தமிழ் மொழி
   (ii) ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியம்
   (iii) கணிதம்

**மற்றும்**

2. க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல். (சாதாரண பொதுப் பரீட்சை தவிர)

**கீழுள்ள தகைமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

a. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட 06 மாதங்களுக்கு குறையாத கணினி பயன்பாடு தொடர்பில் அங்கீகரிக்க முயுமான தகைமை.

**மற்றும்**

b. கணினி பயன்பாடு தொடர்பில் இரண்டு (02) ஆண்டுகள் அனுபவம் இருத்தல்.

**பதவிக்கு பிரத்தியேகமான தகைமைகள்**

மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் தவிர விண்ணப்பதாரர் முகாமைத்துவ உதவியாளர் தரம் III (களஞ்சிய பராமரிப்பு) பதவி ஒன்றில் சிறப்பு தகைமை ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

களஞ்சிய பராமரிப்பு தொடர்பில் குறைந்தது ஓர் ஆண்டு (01) அனுபவம் ஒன்று/ அல்லது க.பொ.த. (சா.தர) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொ.த. (உ.தர) பரீட்சையில் கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு:**
பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும் வகையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களினால் பாதுகாப்பு வைப்பு ஒன்றை வைப்புச் செய்தல் வேண்டும்.

**சம்பள முறை:**
U-MN 1 (III) - ரூபா 49,475 - 17 X 540 – 58,655 (மாதாந்தம்)

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 06/2025 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 02/2025(i) இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.)

**ஆட்சேர்ப்பு முறை:**
எழுத்துமூல பரீட்சை (புள்ளி 75%) மற்றும் நேர்முகப் பரீட்சை (புள்ளி 25%) மூலம்

எழுத்துமூல பரீட்சை கீழுள்ள பாடங்களைக் கொண்டது.

- சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழி தொடர்பில் அறிவு
- நுண்ணறிவுச் சோதனை மற்றும் பொது அறிவு
- கணினி அறிவு
- களஞ்சிய பராமரிப்பு தொடர்பான அறிவு

**வேறு தகைமைகள்:**

a) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

b) விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாத மற்றும் 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

c) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்

✶✶ அடிப்படைச் சம்பளம் தவிர வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை 2026.08.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒன்லைன் அமைப்பு மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒன்லைன் அமைப்பு மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு, விண்ணப்பதாரர் https://uom.lk/vacancies என்ற இணையதளத்திற்கு பிரவேசித்தல் வேண்டும். ஒன்லைன் விண்ணப்ப முறை 2026.08.09 ஆம் திகதி தொடக்கம் திறக்கப்படுவதோடு 2026.08.31 ஆம் திகதி நிறைவடையும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஒன்லைன் முறையின் ஊடாக ஒவ்வொரு பதவிக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை தரவிறக்கம் செய்து வன் பிரதியை (Hard Copy) தன்னால் உறுதி செய்யப்பட்டு மற்றும் அனைத்து இணைப்புகளுடனும் உதவிப் பதிவாளர்/ நிறுவன (கல்விசாரா) பிரிவு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம், மொறட்டுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.08.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனங்களில், அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மேலுள்ளவாறு தரவிறக்கம் செய்து தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

மேலுள்ளவாறு பதிவுத் தபாலில் அல்லது திணைக்கள தலைவர்கள் மூலம் அனுப்பப் படாத, தாமதித்துக் கிடைக்கின்ற அல்லது முழுமை பெறாத விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதை தயவுடன் கருத்தில் கொள்ளவும்.

அபேட்சகர்கள் குறுகிய பட்டியலில் சேர்க்கும் (Shortlist) உரிமை பல்கலைக்கழகம் வசமானது. தேவையான விண்ணப்பங்களை ஒன்லைன் முறை மூலம் சமர்ப்பிக்கும்போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால் 011-2640511 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

**பதிவாளர்**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**
**மொறட்டுவை**
**2026.08.07**